*மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களே,*

*மாண்புமிகு தென் மண்டல மாநில முதல்வர்களே,*

*பாரத ரிசர்வ் வங்கியின் ஆளுனர் அவர்களே!*

*பொது துறை வங்கிகள், நிதி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளே மற்றும் தென்மண்டலத்தைச் சார்ந்த மூத்த அதிகாரிகளே!*

வங்கி சார்ந்த விபரங்கள் தொடர்பான எங்களின் கருத்துக்களை முன்வைப்பதற்காக வாய்ப்பளித்து தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தினை ஏற்பாடு செய்தமைக்கு மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வங்கியில் கணக்குகள் துவங்குவதற்கு, புதுச்சேரி மாநிலத்தில் தான், வங்கியில் கணக்குகள் துவங்குவதற்கான திட்டம் தொடங்கப்பட்டு, இதன்மூலம் 1.93 இலட்ச குடும்பங்களுக்கு பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டன. இது மொத்த எண்ணிக்கையில் 64 விழுக்காடாகும். இந்த வங்கி கணக்கு உள்ளவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கி, முகவர்கள் உதவியுடன் கையடக்க கருவிகளின் மூலம் பண பரிவர்த்தனை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்வாபிமான் 2012-13 திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இம்மாநிலம் அடைந்துவிட்டது. நிதி அமைச்சக வழிகாட்டுதலின் அடிப்படையில், வங்கிகள், நகர்புறங்களில் சாலையோர வியாபாரிகள் வங்கி கணக்குகள்

துவங்க முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இதற்காக ஒரு அழைப்பு மையம் ஒன்றினை புதுச்சேரியில் ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, பல நலத்திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு மின்னணு மூலம் நிதி பரிமாற்றம் செய்ய வாடிக்கையாளர்களின் வங்கி கணக்குகளில் ஆதார் எண்களை சேர்த்தல் பணியும் நடைபெற்று வருகிறது.

3. மாநில அளவிலான வங்கிகளின் குழு கூட்டத்தின் கோரிக்கையின்படி, வருவாய் மீட்பு சட்டத்தில் ஒரு சில மாற்றங்களை செய்ய இந்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த மாற்றங்கள், வருவாய் மீட்பு சட்டத்தில் சேர்க்கப்பட்ட பின்பு அரசு நிதியுதவி திட்டங்களின் மூலமாக கொடுக்கப்பட்ட கடன்களின் வசூல் அதிகரிக்கும். இந்த யூனியன் பிரதேசத்திலுள்ள நில பதிவேடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தகவல் அரசு இணையதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளது. நிலம் தொடர்பான விபரங்கள் டிஜிட்டலாக்குவதற்கான பணி முடியும் தருவாயில் உள்ளது. வங்கி நிர்வாகிகளின் கோரிக்கையான ஒருங்கிணைந்த, தொகுக்கப்பட்ட நிலப்பதிவேடுகளை இணையதளம் மூலம் பார்வையிடும் வசதியினை தேசிய நில பதிவேட்டு நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கட்டாயமயமாக்கப்பட்டுள்ளதால், இத்திட்டம் முடிவடையும் போது இணையதளத்தை பார்வையிடும் வசதி கொடுக்கப்படும்.

4. பயனாளிகளுக்கான மின்னணு பரிமாற்ற திட்டத்தின் கீழ், இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட 32 திட்டங்களில், 21 திட்டங்களுக்கு மின்னணு பணபட்டுவாடா வசதி ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டது. மீதமுள்ள 11 திட்டங்களுக்கு தகுந்த பயனாளிகள் இல்லாததால், நான்கு திட்டங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

5. மாநில அளவிலான வங்கி குழுவின் அறிக்கையின்படி, 2011-12 ஆண்டிற்கான வேளாண் கடன் ₹ 129.97 கோடிக்கு பதிலாக ₹ 579.74 கோடியாகும். 2009-10 மற்றும் 2010-11 நிதியாண்டில், வேளாண் கடனாக முறையே ₹ 347.77 கோடி மற்றும் ₹ 357.94 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான வங்கி குழுவின் அறிக்கையில் புதுச்சேரியின் கடன் வைப்பு விகிதாச்சாரம் (CD ratio) 74 விழுக்காடாகும். பயிர் மற்றும் முதலீட்டு பிரிவுகளுக்கு அதிகமாக அளிக்கப்பட்ட கடன்தொகையே இந்த ஏற்றத்திற்கு காரணமாகும். முதன்மையான பிரிவுக்கு ₹3602 கோடி கடன் அளிக்கப்பட்டுள்ளது. 2011-12ன் ஆண்டிற்கான வேளாண் பிரிவில் கீழ் வருடாந்திர கடன் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.612 கோடியில் ரூ. 580 கோடி (95%) பண பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. பண்ணை சாரா பிரிவின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.220 கோடிக்கு பதிலாக

ரூ.232 கோடி பண பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மிக நுண்ணிய மற்றும் சிறிய வணிக கடன் திட்டத்தின் கீழ், எமது யூனியன் பிரதேசம் 60.07 விழுக்காடு பெற்றுள்ளது.

**6.** புதுச்சேரியில் துவங்கப்பட்ட மண்டல கிராம வங்கியான புதுச்சேரி பாரதியார் கிராம வங்கிக்கு மாநில அரசு சார்பில் ரூ.2.02 கோடி மாநில பங்காக கொடுக்கப்பட்டுள்ளது. மண்டல தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த வங்கி 27 கிளைகளை திறந்துள்ளது.

**7.** SJSRY திட்டத்தின் கீழ் 2011-12 ஆண்டில் 214 சுய உதவி குழுக்களுக்கு வணிகத்தை மேம்படுத்த சுழற்சி முறையில் நிதியுதவி அளிக்கப்பட்டது. மேலும், 161 சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டது. அதேபோல், புதுச்சேரியில் SGSY திட்டத்தின் செயல்பாடுகள் வெற்றிகரமாக அமைந்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ், 2536 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகிறது. 2011-12 ஆண்டிற்கான வருடாந்திர திட்டத்தின் கீழ், 478 தனிநபர் கடனுதவியும், 56 சுய உதவிக் குழுக்களுக்கு மானியமும், 28 சுய உதவிக் குழுக்களுக்கு சுழற்சி முறை நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

**8.** முறை சாரா பணியாளர்களின் நலன் கருதி, முறை சாரா தொழிலாளர் நலச் சங்கம் ஒன்று சமுதாயச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைசாரா பணியாளர்களுக்கு அடையாள

அட்டை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சங்கத்தில் 22,500 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். 37,000 உறுப்பினர்கள் அடங்கிய பதிவு செய்யப்பட்ட சங்கமான கட்டிடம் மற்றும் கட்டுமான நலக் குழு 37 பிரிவின் கீழ் வரும் கட்டிட மற்றும் கட்டுமான பணியாளர்களின் நலனை மேற்பார்வை செய்து வருகிறது. இந்த சங்கம் மற்றும் நலக்குழு ஆகிய இரண்டையும் ஸ்வாபிமான் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டுவர ஆவன செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்திடம் அதற்கான வழிமுறைகள் ஆலோசிக்கப்பட்டு, கூடிய விரைவில் செயல்படுத்தப்படஉள்ளது.

**9.** 2010 ஆண்டிலிருந்து இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் சார்பில் வறுமைகோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இராஜீவ் காந்தி ஜனஸ்ரீ பீம யோஜனா திட்டத்தினை சமுதாய பாதுகாப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சில நடைமுறை சிக்கல்களின் காரணமாக, இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் ஆண்டு ஒப்பந்தத்தை புதுப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக, பயனாளிகளுக்கு மாநில நிர்வாகம் இராஜீவ் காந்தி சமுதாய பாதுகாப்புத் திட்டம் 2012 எனும் ஒரு புதிய திட்டத்தை மின்னணு பணப்பரிமாற்ற முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

**10.** புதுச்சேரி மாநிலம், பல்வேறு தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை நிறுவியதால், ஒரு கல்வி மையமாக மாறி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த சேர்க்கையின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு நூறு சதவிகித கல்விக் கட்டணத்தை அரசு திருப்பி செலுத்துகிறது. இருப்பினும், எங்களால் அனைத்து மாணவர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர இயலவில்லை. கடந்த கூட்டத்தில், என்னுடைய வேண்டுகோளுக்கிணங்க, கல்வி பிரிவிற்கான கடன்தொகை மார்ச் 2012 ஆண்டு முடிவடைய ரூ.269.43 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இருப்பினும், அதிகமான கல்வி கடன்கள் மாணவர்களுக்கு அளித்து உதவுமாறு வங்கி நிறுவனங்களை இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த யூனியன் பிரதேசத்தில் சுற்றுலாத் துறை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கு முதன்மை முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பிரிவின் மேம்பாட்டிற்காக அளிக்கப்படும் கடன்தொகை மாநிலத்தின் வருவாயை அதிகரிக்க உதவும்.

**11.** இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்தினை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தமைக்கு இத்தருணத்தில் மீண்டும் ஒரு முறை நான் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

□□□